STC 463/2021

30.10.2025.

ம.சா.1,

பெயர்: தாமரைச் செல்வன்

த/பெ. தங்கவேல்

Accused absent. Petition filed and allowed. Accused counsel present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எங்களது நிறுவனம் தனியார் நிறுவனம்(Proprietor Ship) ஆகும். எங்களது நிறுவனத்தின் உரிமையாளர் ஆஸ்த்திரேலியாவில் உள்ளார். அவர் பெயர் ஆதிலட்சுமி லோகி ஆகும். எனது நிறுவனத்திற்கு வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். இயந்திர கோளாறு ஏற்பட்டபோது எங்கள் நிறுவனத்தின் உரிமையாளர் ஆஸ்த்திரேலியாவில் இருந்தார். நான் சொல்லி அவர்களுக்கு விபரம் தெரியும்.

வருமான வரி செலுத்தியதில் நான் வழக்கு காசோலை தொகையை காண்பித்துள்ளேன். வருமான வரி கணக்கை நீதிமன்றம் கோரும் பட்சத்தில் நான் தாக்கல் செய்ய தயராக உள்ளேன். நான் மேலாளராக பணியாற்றி வருகிறேன். நான் மேலாளராக பணியாற்றுவதற்கு நீதிமன்றத்தில் ஏதேனும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் இளங்கலை கணிணி அறிவியல் படித்துள்ளேன். நான் கடந்த 07 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன்.

எனது நிறுவனத்திற்கு எங்கெங்கு கடன் உள்ளது என்று எனக்கு சரியாக தெரியாது. இந்த வழக்கில் நடந்த வரவு செலவு விவரங்கள் முழுமையாக தெரியும். எங்கள் நிறுவனத்தின் சார்பாக வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரியின் நிறுவனத்தினை 2019 ம் ஆண்டிலிருந்து தெரியும். நான் நிறுவனத்தில் சேர்ந்த சமயத்தில் இருந்தே தெரியும். எனக்கு எதிரியை நேரடியாக தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள மூன்று காசோலை வழக்குகளும் எதிரி உத்திரவாதத்திற்காக கொடுத்த காசோலையை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

மேற்படி மூன்று காசோலைகளும் எனது நிறுவனத்திற்காக இயந்திரம் தயாரிக்க கொடுத்த காசோலைகள் என்றால் சரிதான். எதிரி நிறுவனத்திடம் 12 இயந்திரம் வாங்குவதற்காக ஒப்பந்தம் போடப்பட்டது. மேற்படி 12 இயந்திரத்தின் மொத்த விலை ரூ 25,68,000/- ஆகும். மேற்படி ஒப்பந்தம் ஜு லை 2019 ம் வருடம் போடப்பட்டது. மேற்படி ஒப்பந்தத்தின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

இயந்திரம் ஒரு நாளைக்கு எவ்வளவு உற்பத்தி செய்யும் என்றால் அதன் விவரம் எனக்கு தெரியாது. மேற்படி இயந்திரத்தை உருவாக்க எவ்வளவு காலம் ஆகும் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. எதிரி கொடுத்த விலைப்பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விலைப்பட்டியலை தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. விலைப்பட்டியலே கொடுக்கவில்லை. வாய்மொழியாக தான் பேசிக்கொண்டோம்.

நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் விலைப்பட்டியலை வைத்துதான் பணம் கொடுத்தேன் என்றால் அது தவறுதான். எதிரி, 2019 ம் ஆண்டு ஜுலை மாதம் மூன்று காசோலைகளும் கொடுத்தார். மேற்படி காசோலைகளை எதிரி, கையொப்பமிட்டு பூர்த்தி செய்யாமல் கொடுத்தார். மேற்படி காசோலைகளை, நான் வங்கியில் தாக்கல் செய்யும்போது நிரப்பி தாக்கல் செய்தேன். எதிரிக்கு வங்கியில் இருந்து லோன் கொடுக்கப்பட்டது. அதனை மூன்றாக பிரித்து மூன்று காசோலைகளையும் நிரப்பி தாக்கல் செய்தேன். வங்கியில் இருந்து நேரடியாக எதிரியின் கணக்கிற்கு தான் பணம் கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

மேற்படி கடன் தொகை எங்களது நிறுவனத்தில் இருந்து எதிரிக்கு செலுத்தப்படவில்லை என்றால் சரிதான். இதற்கு முன்பு எதிரி நிறுவனம் எங்களுக்கு மட்டை மில் தயாரிக்கும் இயந்திரம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி இயந்திரம் 2013 ம் ஆண்டு செய்து கொடுக்கப்பட்டது. இயந்திரம் தற்போது வரை வேலை செய்கிறது. இயந்திரம் செய்வதற்கு ஆர்டர் கொடுக்கும் போது எதிரியிடம் காசோலை வாங்குவோம் என்றால் சரிதான்.

2013 ம் ஆண்டு செய்த இயந்திரத்திற்கு நாங்கள் உத்திரவாத காசோலை வாங்கவில்லை. அந்த இயந்திர வரவு செலவுக் கணக்கில் பிரச்சனை இல்லை. வழக்கு தொடர்பான இயந்திரத்தை எதிரி எங்களுக்கு கொடுக்கவே இல்லை. முதலில் இரண்டு இயந்திரங்களை கொடுத்தார் அது சரிவர வேலை செய்யவில்லை. தற்போது வரை இயந்திரம் சும்மா தான் இருக்கிறது. மேற்படி இயந்திரங்களை எதிரி சேலத்தில் வைத்து உருவாக்கினார்.

மேற்படி இரண்டு இயந்திரங்களை எந்த தேதியில் கொடுத்தார் என்றால் தற்சமயம் எனக்கு ஞாபகம் இல்லை. எனது வழக்கறிஞர் அறிவிப்பு, புகார், பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றில், இயந்திரங்கள் அனைத்தும் வந்துவிட்டது என்று கூறியிருந்தால் அது சரியல்ல. இரண்டு இயந்திரம் மட்டும் தான் வந்தது. மேற்படி இரண்டு இயந்திரங்களும் நாங்கள் ஓட்டிப் பார்த்தோம் அது இயங்கவில்லை என்று மூன்று நாட்களில் தெரிந்து கொண்டோம்.

மேற்படி இயந்திரங்ளை திருப்பி அனுப்புவதற்கு என்ன முயற்சி எடுத்தேன் என்றால் நாங்கள் அவர்களிடம் இயந்திரத்தை எடுத்துப் போக கூறினோம். அவர்கள் தற்போது வரை இயந்திரத்தை எடுத்துச் செல்லவில்லை. இயந்திரத்தை எடுத்துப்போக சொல்லி கடிதம் அனுப்பினேனா என்றால் இல்லை. அழைபேசி மூலமாகவும் வாட்சப் மூலமாகவும் கூறியுள்ளேன். பு.சா.ஆ.6 ஆவணத்தில் எனது நிறுவனத்தின் சார்பாக நிறுவன உரிமையாள ர் ஆதிலட்சுமி லோகி அவர்களின் மாமனாருக்கு பவர் கொடுத்துள்ளோம். அவர் தான் கையொப்பமிட்டார். அவர் பெயர் மேகராஜ்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள சங்கதிகள் குறித்து எனக்கு தெரியாது. அதில் உள்ள பாக்கித் தொகை விபரம் குறித்து எனக்கு தெரியாது. மொத்தமாக 25,68,000/- ரூபாய்க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எதிரி எவ்வளவு பாக்கித் தொகை தர வேண்டும் என்றால் அவர் எங்களுக்கு பணமே தரவில்லை. இயந்திரம் தயார்செய்வதற்காக பொள்ளாச்சி கனரா வங்கியில் இருந்து 25,68,000/- ரூபாய் கடனாக பெற்றோம்.

மேற்படி கடன் வாங்குவதற்காக கொடுக்கப்பட்ட பிராஜெக்ட் ரிபோர்ட்டை தாக்கல் செய்ய இயலுமா என்றால் முடியும். மேற்படி கடனை நாங்கள் கட்டிக் கொண்டு வருகிறோம். வழக்கு சம்பந்தமாக நடவடிக்கைகளை கொரோன காலக்கட்டத்தில் செய்தோம் என்றால் சரிதான். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டவருக்கு அதன் விவரம் தெரியும் என்றால் சரிதான்.

வழக்கறிஞர் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/- Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.